MILCO

දේශයේ අභිමානය

# වාර්ෂික වාර්තාව
# வருடாந்த அறிக்கை
# ANNUAL REPORT

## 2011-2012



## எமது தொலைநோக்கு

இலங்கையின் "தலைசிறந்த" போஷாக்குமிக்க உணவு
மற்றும் பான உற்பத்தி நிறுவனமாகத் திகழ்தல்

## எமது குறிக்கோள்

எமது நாட்டினுள் பால் வளத்தினை தன்நிறைவு
செய்வதன் மூலம் தாய்ப் பாலின் பல்வகைப்பட்ட
போஷாக்குள்ள உணவு வகைகளை சகல
தரத்தினருக்கும் சகல வயதினருக்கும் வழங்குதல்

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| கூட்டுக்குழுத் தகவல் | 1 |
| தவிசாளரிடமிருந்து செய்தி | 2 - 3 |
| பணிப்பாளர்களின் அறிக்கை | 4 - 5 |
| கூட்டுக்குழு ஆட்சி | 6 |
| கணக்காய்வுக் குழுவின் அறிக்கை | 7 |
| குழுப் புகைப்படம் | |
| கணக்காய்வாளரின் அறிக்கை | 8 - 9 |
| வருமானக் கூற்று | 10 |
| ஐந்தொகை | 11 |
| ஒப்புரவில் மாற்றங்களின் கூற்று | 12 |
| பணப்புழக்கக் கூற்று | 13 |
| நிதிசார் கூற்றுகளுக்கான குறிப்புகள் | 14 - 34 |
| நிதிசார் சிறப்பம்சங்கள் | 35 |

# கூட்டுக்குழுத் தகவல்

| | | |
|---|---|---|
| கம்பனியின் பெயர் | - | மில்கோ (பிறைவேற்) லிமிட்டெட் |
| சட்ட அந்தஸ்து | - | 1982இன் கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கையில் ஒன்றிணைக்கப்பட்ட ஒரு தனியார் வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனி |
| பதிவு செய்யப்பட்ட அலுவலகம் | - | இல. 45, நாவல வீதி, நாரஹேன்பிட்டி,<br>கொழும்பு 05<br>தொலைபேசி: 0112586174, 0112582331-4, 0112586872 |
| | - | பக்ஸ்: 0112368082/ 0115333328 / 0112 590 334 |
| | - | இணையதளம: www.milco.lk |
| | - | ஈ-மெயில்: info@milco.lk |
| தொழிற்சாலைகள் | - | கொழும்பு பால் தொழிற்சாலை (CMF)<br>திகன பால் தொழிற்சாலை (DMF)<br>அம்பேவல விசிறி உலர் பால் தொழிற்சாலை (SDMF)<br>பொலன்னறுவை கட்டிப்பால் தொழிற்சாலை (PMF) |
| ஒன்றிணைக்கப்பட்ட திகதி | - | 09 மே 1996 |
| மீள்பதிவுத் திகதி | - | 19 மே 2008 |
| கம்பனியின் பதிவு இலக்கம் | - | N(PVS) 17159 (பழைய)<br>PV 2942 (புதிய) |
| கம்பனியின் செயலாளர் | - | பினான்ஷியல் சேர்விசஸ் அன்ட் கொமர்ஷல் ஏஜன்சீஸ்<br>இல.28, ரொஸமிட் பிளேஸ், கொழும்பு 07 |

| | | | |
|---|---|---|---|
| பணிப்பாளர் சபை | - | திரு.சுனில் விக்ரமசிங்க | - தவிசாளர் |
| | | திரு.சஞ்ஜய லீலாரத்ன | - பிரதித் தவிசாளர் |
| | | திரு.நவ்ஷாட் ஜுனைடீன் | - தொழிற்பாட்டு பணிப்பாளர் |
| | | திரு.ஆர்.சிவராம் | - பணிப்பாளர் |
| | | திரு.எஸ்.லோகநாதன் | - பணிப்பாளர் |
| | | திரு.அஜித் திஸ்ஸநாயக்க | - பணிப்பாளர் |
| | | திரு.திலங்க வீரசிங்க | - பணிப்பாளர் |
| | | திருமதி தஷிக்கா எட்வேர்ட்ஸ் | - பணிப்பாளர் |
| | | திரு.டபிள்யு.ஜி.ஆர்.எச்.பண்டிதரத்ன | - பணிப்பாளர் |

| | | |
|---|---|---|
| கணக்காய்வாளர்கள் | - | உள்ளக<br>மெஸர்ஸ் எஸ்.ஜே.எம்.எஸ். அசோசியேற்ஸ்<br>இல.02, காசில் ஒழுங்கை<br>கொழும்பு 04 |
| | - | வெளியக<br>மெஸர்ஸ் பீ.டி.ஒ. பார்ட்னர்ஸ்<br>இல. 65/2, சேர் சிற்றம்பலம் எ.கார்டினர் மாவத்தை<br>கொழும்பு 02. |
| வங்கியாளர்கள் | - | மக்கள் வங்கி<br>இலங்கை வங்கி |

2012 மார்ச் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கு கம்பனியின் செயல்நிறைவேற்றத்தின் மதிப்புரையொன்றைச் சமர்ப்பிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

மில்கோவுக்கு தொடர்ச்சியான சாதகமான நிதிசார் செயல்நிறைவேற்றத்தைப் பராமரிப்பது மிகவும் கஷ்டமாகவிருந்தது. உடன்பாலுக்கு கமக்காரர்களுக்கு கொடுப்பனவாகிய விலையை அதிகரிப்பதற்கு ஓர் பெறுமதியானதும், தொலைதூர எண்ணத்திலானதுமான தீர்மானமொன்றும், மில்கோ குழாமினால் எடுக்கப்பட்ட பாரிய முயற்சிகளும் நாட்டில் என்றுமே சம்பவிக்காத விதத்தில் உடன்பால் வளர்ச்சியொன்றில் விளைந்தது.

உடன்பால் விநியோகங்களுக்கு கமக்காரர்களுக்கு கொடுப்பானவாக 57% அதிகரிக்கப்பட்ட விலை நிலவிய போதிலும், பெருமளவு மாதங்களுக்கு உற்பத்தி விற்பனை விலைகளைப் பேணுவதற்காக அமைச்சின் ஆலோசனையின் பேரில் நாட்டின் பெறுமதிமிக்க கூட்டாண்மைப் பிரஜையொன்றாக விளங்கிய மில்கோவினால் ஒரு குறிப்பிடத்தக்க தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆண்டின் நடுப்பகுதியில் அனுபவிக்கப்பட்ட எரிபொருள் விலை அதிகரிப்புடன் உற்பத்தி ஆகுசெலவு மேலும் அதிகரித்தது.

விற்கப்பட்ட பொருட்களின் ஆகுசெலவில் அதிகரிப்புக்கு பங்களித்த காரணிகள் மேற்கோளின் கீழுள்ள ஆண்டுக்கு ரூபா 226 மில்லியன் கொண்ட கணிசமானளவு நஷ்டமொன்றில் விளைந்தது.

எனினும், மதிப்புரையின் கீழுள்ள ஆண்டின் போது கம்பனியின் மொத்த விற்பனை முற்போந்த ஆண்டுக்கு மேலாக 16%ஐக் கொண்ட வளர்ச்சியொன்றைக் கொண்டிருந்தது. 2010/2011உடனான ரூபா 4.548 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 5.263 பில்லியன் கொண்ட மொத்த விற்பனையொன்று சாதிக்கப்பட்டது.

## பாற்பண்ணை அபிவிருத்தி மற்றும் பால் சேகரிப்பு

இது பாற்பண்ணை அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு ஒரு பிரமாண்டமான ஆண்டாகும். இது நாட்டில் “பால் வெள்ளை” புரட்சியொன்றாகும். உடன்பாலுக்கு கமக்காரருக்கு கொடுப்பனவாகிய விலையானது மொத்தத் திரவம் மீது ஒரு லீட்டருக்கு ரூபா 50 வரை அதிகரித்தது. இது சர்வதேசச் சந்தை விலையை விட குறைவானதல்ல, அவ்வாறாக கைத்தொழிலை வர்த்தகமயமாக்குகின்றது. உடன்பால் விநியோக வளர்ச்சி 32% என்பதுடன், நாளொன்றுக்கு 230,000 லீட்டர்கள் என்ற உச்சக் காலம் அடைந்து, எமது தொழிற்சாலைகளை நிரம்பி வழியச்செய்தது.

நாட்டில் பாற்பண்ணைக் கமக்காரர்களுக்கு ரூபா 3.47 மில்லியன் கொண்ட தொகையொன்றை மில்கோ கொடுப்பனவு செய்து, அவ்வாறாக கிராமிய மற்றும் பெருந்தோட்டச் சமூகத்தின் பொருளாதார மட்டங்களை உயர்த்தியமை மகிழ்ச்சியை அளிக்கின்றது.

### பால் சேகரிப்பு

| ஆண்டு | லீ. மில் | வளர்ச்சி |
|---|---|---|
| 2007 | 54 | |
| 2008 | 53.5 | - 0.95% |
| 2009 | 54.9 | 2.47% |
| 2010 | 55.5 | 1.19% |
| 2011 | 52.8 | -5% |
| 2012 | 68.5 | 30% |

## உடன்பாலின் தரம்

தரம் மீது விட்டுக்கொடுப்பு இருக்கவில்லை.
கமக்காரர்களினால் விநியோகிக்கப்பட்ட உடன்பாலின் தரத்தைப் பேணுவதற்கு சகல முயற்சிகளும் எடுக்கப்பட்டன. மில்கோ தொழிற்சாலைகளில் விநியோகிக்கப்பட்ட உடன்பாலின் தரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமொன்றிருந்தது. இந்த அப்பியாசத்தில் மில்கோ பாற்பண்ணை அபிவிருத்தி வெளிக்களப் பணியாளர்கள் முக்கியமான வகிபங்கொன்றை ஆற்றினார்கள்.

## விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்

முடிவுறுத்தப்பட்ட உற்பத்திப்பொருட்களை விநியோகிப்பதற்கு நாடுபூராவும் 101 விநியோகஸ்தர்களை மில்கோ கொண்டுள்ளது. விற்பனைப் படையானது 28 விற்பனைப் பிரதிநிதிகளையும், 10 பகுதி முகாமையாளர்களையும் மற்றும் 6 நிருவாக அலுவலரையும் கொண்டுள்ளது. மேலதிகமாக, 55 பணியாட் உறுப்பினர்களுடன் 11 விற்பனை நிலையங்களைக் கம்பனி கொண்டுள்ளது. இந் நோக்கத்திற்காக 10 பிராந்தியங்களாக நாடு எல்லை

பிரிக்கப்பட்டுள்ளது. உற்பத்திப்பொருள் புதுப்பித்தலும், புதிய கண்டுபிடிப்பும் முன்னேற்றத்தில் உள்ளது. சகல சில்லறை விற்பனை நிலையங்களிலும் கொள்வனவு செய்வதற்கு சகல பாவனையாளர்களுக்கும் மில்கோ உற்பத்திப்பொருட்கள் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்காக புதிய விநியோகத்தை அதிகரிப்பதே எமது பிரதான நோக்கமாகும். இத் திசையில், சில்லறை விற்பனை நிலையங்களை 50,000க்கு அதிகரிப்பதற்கும், மொத்தமாக 140 விநியோகஸ்தர்களுடன் 400 வரையிலான விநியோக வாகனங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் நாம் முன்னுணர்வினைக் கொண்டுள்ளோம்.

### மில்கோ பணியாளர்

மொத்தமாக சகல பணியாட் வகுதிகளிலும் 1,470 பணியாட் உறுப்பினர்களை கம்பனி தொழிற்படுத்துகின்றது. சேமநலன் செயற்பாடுகள் ஊடாக ஊழியரின் செயற்றிறனை மேம்படுத்துவதற்காக இந்த ஆண்டின் போது பெருமளவு முன்னேற்றகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கு சுகாதாரக் காப்புறுதி ரூபா 50,000இலிருந்து ரூபா 125,000க்கு அதிகரிக்கப்பட்டதுடன், கடல்கடந்த நாடுகளில் சிகிச்சைக்கு ரூபா 625,000 வரையிலான கொடுப்பனவும், முன்னர் வழங்கப்படாத 25 ஆபத்திலான சுகவீனங்களுக்கு ரூபா 500,000 வரையிலான கொடுப்பனவும் அதிகரிக்கப்பட்டதுடன், சகல ஊழியர்களுக்கும் ரூபா 15,000இனால் வாழ்க்கைச் செலவுப்படி அதிகரிக்கப்பட்டது.

### முன்னோக்கிய வழி

இலங்கையின் மக்களுக்கு போஷாக்கிலான உணவை வழங்குவதற்கான அர்ப்பணிப்பினை மில்கோ கொண்டுள்ளது. தற்போதைய தொழிற்சாலை இயந்திராதிகள் 50 வருடங்களுக்கு மேற்பட்டவை என்பதுடன், அம்பேவல, திகன மற்றும் பொலன்னறுவை ஆகியவற்றில் உள்ள 3 தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துவதற்கு DESMI ஒப்பந்த முகவராண்மையுடன் வர்த்தக உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஆகுசெலவு இயூரோ 33.8 மில்லியனாகும். நாளொன்றுக்கு 320,000 லீட்டர்களிலிருந்து நாளொன்றுக்கு 700,000 லீட்டர் வரை அதிகரிக்கப்பட்ட கொள்ளளவை நவீனமயப்படுத்தப்பட்ட தொழிற்சாலைகள் கொண்டிருக்கும். கொழும்பு தொழிற்சாலை பட்டல்கம NLDB பண்ணை நிலத்திற்கு இடமாற்றப்படுவதுடன், நாளொன்றுக்கு 200,000 லீட்டர்கள் கொண்ட கொள்ளளவொன்றுடன் பட்டல்கமவில் ஒரு புதிய தொழிற்சாலை ஆரம்பமாகும். புதிய தொழிற்சாலை தாபிக்கப்பட்ட பின்னர் புதிய வகைகளைக் கொண்ட போஷாக்கிலான உணவு உற்பத்திப்பொருட்களை உற்பத்தி செய்வதற்கான வாய்ப்பினை மில்கோ கொண்டிருக்கும்.

### பொது

விசேட திரவப்பாலுக்கு வணிகக்குறி நீடிப்புடன், புதிய உறபத்திப்பொருட்களைக் கண்டுபிடிப்பதற்கு பாரிய முன்னேற்றத்தை புதிய உற்பத்திப்பொருள் அபிவிருத்திப் பிரிவு அடைந்துள்ளது. முன்னுணர்வு கொள்ளப்பட்டுள்ள நவீனமயமப்படுத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டவுடன், முடிவுறுத்தப்பட்ட உற்பத்திப்பொருட்களின் விநியோக வலைப்பின்னலை மேம்படுத்துவதற்கு முன்னெடுப்புக்கள் இருக்கும் என்பது மிகவும் இன்றியமையாததாகும்.

எமது பெறுமதிமிக்க பாவனையாளர்கள் மத்தியில் “ஹைலன்ட்” வணிகக்குறியைப் பிரசித்தப்படுத்துவதற்கான வணிகக்குறி முன்னேற்ற மற்றும் சந்தைப்படுத்தல் முயற்சிகளுக்கு புதிய அலுவலரை ஆட்சேர்ப்பது முக்கியமானதாகும்.

உடன்பால் வளர்ச்சியின் திசையில், உடன்பாலில் எமது நாடு சுயநிறைவை அடைவதற்கான பாதையை உறுதிப்படுத்துவதற்கு முந்திய ஆண்டுக்கு மேலாக 30% கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்றைக் கம்பனி அடைந்திருந்தது. நாட்டின் உடன்பாலின் உற்பத்தியை அதிகரிப்பதற்காகப் பெருமளவு முன்னெடுப்புக்கான கால்நடை, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சு ஆரம்பித்துள்ளது. உள்ஞர் உற்பத்தியையும், சுதேசிய மந்தையில் மரபியல் மேம்படுத்தலையும் உயர்த்துவதற்காக உயர் கலப்பின மிருகங்களின் இறக்குமதி இடம்பெற்றுள்ளது.

பெரும் அளவில் எமக்கு ஆதரவளித்த கௌரவ அமைச்சர், கௌரவ பிரதி அமைச்சர், அமைச்சுச் செயலாளர் மற்றும் சகல அமைச்சுப் பணியாளர் ஆகியோருக்கும், சகல வகுதிகளைக் கொண்ட மில்கோ அலுவலருக்கும், மில்கோவின் குறிப்பாக பால் கைத்தொழிலின் முன்னேற்றத்தில் வகிபங்கொன்றை ஆற்றிய ஒவ்வொரு தனிப்பட்டவருக்கும் மில்கோ பணிப்பாளர் சபையின் சார்பில் நான் நன்றிகூறுகின்றேன்.

**சுனில் விக்ரமசிங்க**
தவிசாளர்
மில்கோ (பிறைவேற்) லிமிட்டெட்
31 ஜனவரி 2013

## பணிப்பாளர்களின் அறிக்கை

2012 மார்ச் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிசார் கூற்றுக்களுடன் சேர்த்து, தமது அறிக்கையை உறுப்பினர்களுக்குச் சமர்ப்பிப்பதில் மில்கோ (பிறைவேற்) லிமிட்டெட்டின் பணிப்பாளர்கள் மகிழ்ச்சி அடைகின்றனர்.

## பிரதான செயற்பாடுகள்

உடன்பாலைச் சேகரித்தல், பதப்படுத்தல், பொதிப்படுத்தல், விநியோகித்தல் மற்றும் பால் உற்பத்திப்பொருட்களைச் சந்தைப்படுத்தல் ஆகியனவே ஆண்டின் கம்பனியின் பிரதான செயற்பாடுகள் ஆகும்.

## வியாபாரத்தை மதிப்பாய்தல்

பணிப்பாளரின் அறிக்கையின் பூரணமான அங்கமொன்றை அமைக்கும் தவிசாளரினது, மதிப்பாய்வானது 31.03.2012இல் முடிவடைந்த ஆண்டின் போது கம்பனியின் தொழிற்பாடுகளின் விரிவான விவரணமொன்றையும், கம்பனியின் அலுவல்களின் நியாயமான மதிப்பாய்வு ஒன்றையும் அடக்கியுள்ளது.

## ஆதனம், பொறிகள் மற்றும் சாதனங்கள்

ஆதனத்திற்கும், பொறிகளுக்கும், சாதனங்களுக்கும் ஆண்டின் போது செய்யப்பட்ட சேர்ப்புக்களின் விபரங்கள் ரூபா 422.1 மில்லியன் என்பதுடன், மதிப்பிறக்கக் கட்டணங்கள் காட்டப்படுள்ளன.

## பணிப்பாளர் சபை

2010 மே 13இலிருந்து செயற்படத்தக்கதாக புதிய கால்நடை, கிராமியச் சனசமூக அபிவிருத்தி அமைச்சினை வகுத்தமைத்த பின்னர் திறைசேரிச் செயலாளரினால் பின்வரும் பணிப்பாளர்கள் சபை நியமிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| திரு.சுனில் சில்லப்பன விக்ரமசிங்க | - | தவிசாளர் |
| திரு.கங்கணம்கே சஞ்ஜய லீலாரத்ன | - | பிரதித் தவிசாளர் |
| திரு.மொகமட் நவ்ஷாட் ஜுனைடீன் | - | தொழிற்பாட்டு பணிப்பாளர் |
| திரு.ராஜு சிவராம் | - | பணிப்பாளர் – M.Sc (Arch) FIA (இலங்கை) |
| திரு.செல்வதுரை லோகநாதன் | - | பணிப்பாளர் – FCMA (ஐ.இ.) FSCMA (இலங்கை) |
| திரு.அஜித் திஸநாயக்க | - | பணிப்பாளர் – (Ph.D) |
| திரு.திலங்க வீரசிங்க | - | பணிப்பாளர் – சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, சத்தியபிரமாண ஆணையாளர் |
| திரு. அரிநேசராஜா சக்திவேல் | - | பணிப்பாளர், விவசாயப் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா: பொரு (ஐ.இ.) இளமாணிப் பட்டம் (மிருக வைத்.) பேராதனை |
| திரு.ரத்னதிலக லேகம்கே | - | பணிப்பாளர் |

மேற்படி சபையிலிருந்து பின்வரும் இரு பணிப்பாளர்கள் பின்வருமாறு இராஜினாமா செய்தார்கள்:

திரு. அரிநேசராஜா சக்திவேல், 21.12.2010இலிருந்து செயற்படத்தக்கதாக இராஜினாமா செய்தார்.

திரு.ரத்னதிலக லேகம்கே, 21.12.2010இலிருந்து செயற்படத்தக்கதாக இராஜினாமா செய்தார்.

மேற்படி வெளிச்சென்ற இரு பணிப்பாளர்களுக்கு பதிலீடாக சபைக்கு பின்வரும் இரு புதிய பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர்:

திரு.தனுக டிக்வெல, 21.12.2010இலிருந்து செயற்படத்தக்கதாக நியமிக்கப்பட்டார்.

திருமதி தஷிக்கா எட்வேர்ட்ஸ், 12.01.2011இலிருந்து செயற்படத்தக்கதாக நியமிக்கப்பட்டார் – பட்டம் (ஆங்கிலம்)

மேற்படி சபையிலிருந்து பின்வரும் பணிப்பாளர் இராஜினாமா செய்தார்:

திரு.தனுக டிக்வெல, 26.04.2011இலிருந்து செயற்படத்தக்கதாக இராஜினாமா செய்தார்.

மேற்படி வெளிச்சென்ற பணிப்பாளருக்காக பதிலீடாக சபைக்கு புதிய பணிப்பாளர் நியமிக்கப்பட்டார்:

திரு.டபிள்யு.ஜி.ஆர்.எச்.பண்டிதரத்ன, 26.04.2011இலிருந்து செயற்படத்தக்கதாக நியமிக்கப்பட்டார்.

## பங்குத் தகவல்

மதிப்பாய்வின் கீழுள்ள ஆண்டு முழுவதும் கம்பனியின் பங்கு மூலதனம் எண்ணிக்கையிலும், பெறுமதியிலும் ரூபா 319.4 மில்லியன் ஆகும்.

## ஒதுக்குகள்

வரியின் பின்னர் ரூபா 226,438,585ஐக் கொண்ட நடப்பு ஆண்டின் நஷ்டத்திற்கு சீராக்கப்பட்ட ரூபா 1,191,278,978 முன்கொண்டு வரப்பட்ட திரண்ட இலாபம் கணக்குகளின் பக்கம் 3இல் வழங்கப்பட்டுள்ளது.

ஆண்டின் இறுதியில் ரூபா 25,000,000ஐக் கொண்ட மூலதன ஒதுக்கையும், ரூபா 1,689,978ஐக் கொண்ட ஆழ் நிதியத்தையும் ஒதுக்குகள் உள்ளடக்குவதுடன், நிதியத்தின் நோக்கமும், விபரமும் கணக்குகளுக்கான குறிப்புகள் 17.1 மற்றும் 18 ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ளன.

**ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் அக்கறை**
கணக்காய்வாளர் அறிக்கையின் குறிப்பு 27.3 விடயத்தின் கீழ் வெளிப்படுத்தப்பட்டவாறும், வழங்கப்பட்டவாறும் கம்பனியுடன் ஏதாவது ஒப்பந்தத்தில் கம்பனியின் பணிப்பாளர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அக்கறை கொண்டிருக்கவில்லை.

**கூட்டுக்குழு ஆட்சி**
சிறந்த கூட்டுக்குழு ஆட்சியை பணிப்பாளர் சபை உறுதிப்படுத்துகின்றது. கம்பனி நோக்கங்களுக்கும், அத்துடன் பங்காளர்களின் நோக்கங்களுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் அமைவாக செயல்நோக்கம் இருப்பதை உறுதிப்படுத்துவது பணிப்பாளர் சபையின் கடமையாகும்.

**வரிவிதிப்பு**
வட்டி வருமானத்திலிருந்து எழுகின்ற வருமான வரிப் பொறுப்பு கணக்குகளுக்கான குறிப்பு இல.23இன் கீழ் வழங்கப்பட்டுள்ளது. தொழிற்படுத்தல் செயற்பாடுகள் மீதான இலாபம் 2006இன் 10ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் பிரிவு 16இன் கீழ் விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.

**நியதிச்சட்டக் கொடுப்பனவுகள்**
அரசாங்கத்திற்கும், ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் உரிய சகல நியதிச்சட்டக் கொடுப்பனவுகள் செம்மையாகவும், நேரகாலத்திற்கும் செய்யப்பட்டுள்ளன என்பதையிட்டு பணிப்பாளர்கள் தமது சிறந்த அறிவுக்கும் நம்பிக்கைக்கும் திருப்தியடைந்துள்ளார்கள்.

**இணக்கப்பாடு**
இலங்கைக்கு அல்லது வேறு எங்கேனும் பிரயோகிக்கத்தக்க சட்டங்களுக்கு அல்லது ஒழுங்குவிதிகளுக்கு முரணான செயற்பாடுகளில் கம்பனி ஈடுபட்டிருக்கவில்லை.

**ஐந்தொகைத் திகதிகளுக்குப் பின்னரான நிகழ்வுகள்**

**நடப்புக் கரிசனைகள்**
எதிர்வுகூறப்படுகின்ற எதிர்காலத்தில் அதன் தொழிற்பாட்டினைத் தொடர்வதற்கு போதிய வளங்களை கம்பனி கொண்டுள்ளது என்பதையிட்டு பணிப்பாளர் சபை திருப்தியடைந்துள்ளது. இதன் காரணமாக, கம்பனியின் கணக்குகளைத் தயாரிப்பதில் நடப்புக் கரிசனைக் கருத்துருவைப் பிரயோகிப்பதை நாம் தொடருகின்றோம்.

**கணக்காய்வாளர்களின் நியமனம்**
31.03.2012இல் முடிவடைந்த ஆண்டுக்கான கம்பனியின் கணக்குகளின் கணக்காய்வுகளுக்கான கணக்காய்வாளர்களாக பட்டயக் கணக்காளர்களான மெஸர்ஸ் பீ.டி.ஒ.பார்ட்னர்ஸ் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் முன்மொழியப்பட்டு, பொது வியாபாரமுயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டுள்ளதுடன், கணக்காய்வாய்வாளர்களின் முறைமையான நியமனம் பங்குடமையாளர்களின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் செய்யப்பட்டது.

பணிப்பாளர்கள் அறிந்தவரை, கணக்காய்வாளர்கள் அவர்களின் சுயாதீனத்தைப் பாதிக்கும் வகையில் அமையக்கூடியவாறான எந்தவொரு உறவையும் நிறுவனத்துடனோ அல்லது அதன் துணை நிறுவனங்களுடனோ கொண்டிருக்கவில்லை.

**சபையின் கட்டளைப்படி**

ஒப்பமிடப்பட்டுள்ளது

பினான்ஷியல் சேர்விசஸ் அன்ட் கொமர்ஷல் (பிறைவேற்) லிமிட்டெட்
(Sec/555/91)
இல.28, ரொஸ்மிட் பிளேஸ்
கொழும்பு 7.

மதிப்பாய்வின் கீழுள்ள ஆண்டின் போது மாதம் ஒரு முறை என்ற அடிப்படையில் சபைக் கூட்டங்களைப் பணிப்பாளர் சபை நடத்தியது. நிதிக் கட்டுப்பாட்டினை பேணிச் செல்லும் போதும், அந்தக் கொடுக்கல் வாங்கல்களை உறுதிப்படுத்தும் போதும் நிறுவனத் திட்டங்கள் மற்றும் வருடாந்த வரவு-செலவுத்திட்டத்தின் மிக முக்கியமான விடயமாக இருப்பதுடன், இவை நிதி வருட ஆரம்பத்தில் சகல நேரடி முகாமையாளர்களின் ஆலோசனைகளுடனும், சபையின் அங்கீகாரத்துடனும் தயார் செய்யப்பட்டுள்ளன.

வரவு-செலவுத்திட்டத்துடன் ஒப்பிடப்பட்ட மாதாந்தச் செயலாற்றுகை அறிக்கை அடுத்துவரும் மாதாந்தக் கூட்டத்தில் ஒழுங்காக அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அறிக்கையானது நிதி சம்பந்தமானதும், இயக்கச் செயலாற்றுகை பற்றியதுமான வேளைக்குரிய தகவல்களை இலக்குகளுடன் சமர்ப்பிக்கிறது. அது மட்டுமன்றி கம்பனியின் இலாப நஷ்டங்கள் தொடர்பில் பயனுள்ள முகாமைத்துவத் தீர்மானங்களை பணிப்பாளர் சபை மேற்கொள்வதற்கும் இது வழி வகுக்கிறது.

## கணக்காய்வுக் குழு

பொதுத் திறைசேரியைப் பிரதிநிதிப்படுத்தும் பணிப்பாளர் ஒருவரினால் கணக்காய்வுக் குழுவின் தலைவராக வரமுடியும். மில்கோ (பிறைவேற்) லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையைப் பொதுத் திறைசேரி பிரதிநிதித்துவப்படுத்தாததுடன், குழு பணிப்பாளர்கள் இருவரின் மூலம் செயற்படுவதுடன், குழுவின் தலைவராக அவர்களில் ஒருவர் செயற்படுகின்றார். இந்தக் குழு சபையின் உப குழுவாக செயற்படுத்தப்படுவதுடன் சுயாதீன உணர்வுடன் செயற்படுகின்ற உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் ஊடாக சேவை மேற்கொள்ளப்படுகின்றது.

வருடத்தின் போது மெஸர்ஸ் SJMS அசோஸியேட்ஸ் உள்ளகக் கணக்காய்வாளர்களாக இயங்கி வந்தது. அதன் பிரதான அலுவலகத்திற்குப் புறம்பாக கொழும்பு, அம்பேவல, திகன ஆகிய தொழிற்சாலைகளின் வதிவிட அலுவலர்களுடன் செயற்படுகின்ற கிளை அலுவலங்களும் உள்ளன.

உள்ளகக் கணக்காய்வாளர்களினால் தயாரிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கை வருட ஆரம்பத்தில் கணக்காய்வுக் குழுவின் அங்கீகாரத்துக்கெனச் சமர்ப்பிக்கப்பட்டது. அத்துடன் இந்தத் திட்டத்தின் பிரகாரம் வருடம் முழுவதும் கணக்காய்வுச் சரிபார்த்தல்களும், பரிசோதனைகளும் இடம்பெற்றன. கணக்காய்வு அறிக்கைகளில் வெளிப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக அவர்களுடைய கருத்துக்களையும், பதில்களையும் தெரிந்து கொள்வதற்கு முதலாவதாக உரிய முகாமையாளர்களுடனும், திணைக்களத் தலைவர்களுடனும் கலந்துரையாடப்படும். அந்த விடயங்களின் பிரகாரம் சுருக்க அறிக்கையொன்று தயார் செய்யப்படுவதுடன் புலனாய்வு மற்றும் செய்ய வேண்டிய பணிகள் தொடர்பாக அவை கணக்காய்வுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும். இந்தக் குழு ஒரு மாதத்திற்கு ஒரு முறை கூடும்.

## கூட்டுக்குழு முகாமைத்துவம்

நிறுவனம் பங்கு உரிமையாளர்களுக்கு நிறுவனத்தின் நிதி நிலைமை தொடர்பில் நியாயமானதும், சரியானதுமான பிரதிநிதித்துவத்தை வெளிப்படுத்தும் வகையில் உரிய கணக்கு அறிக்கைகளைப் பேணிச் செல்லும் வகையில் பணிப்பாளர் சபை உறுதிப்படுத்துகின்றது. அதே போன்று அவர்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் கம்பனி சட்டத்தின் தேவைகளுக்கு ஏற்ப நிதிக் கூற்றுக்கள் தயார் செய்யப்படுகின்றமையினை உறுதிப்படுத்தல் வேண்டும்.

கணக்காய்வுக் குழு பொதுவாக நிறைவேற்றுத்தரம் அல்லாத பணிப்பாளர்கள் மூவரைக் கொண்டிருக்க வேண்டியதுடன், அவர்களில் ஒருவர் பொதுத் திறைசேரியின் பிரதிநிதியாக இருக்கவேண்டிய அங்கத்தவராக இருத்தல் கட்டாயமாகும். இந்த அங்கத்தவர் குழுவின் தலைவராகச் செயற்படுதல் வேண்டும். நடைமுறையில் மில்கோ (பிறைவேற்) லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையானது பொதுத் திறைசேரியின் அங்கத்தவரினைப் பிரதிநிதித்துவப்படுத்தாததுடன், குழு பணிப்பாளர்கள் இருவருடன் செயற்படுவதுடன் குழுவின் தலைவராக கீழ் கையொப்பமிடுகின்றவர் பணியாற்றுகின்றார்.

மீளாய்வு காலத்தின் போது ஒழுங்குமுறையான கூட்டங்கள் நடைபெற்றன. நிதிக் கட்டுப்பாட்டாளர், இரு உதவி முகாமையாளர்கள் (நிதி) மற்றும் உள்ளகக் கணக்காய்வு முகாமையாளர் ஆகியோர் அழைப்பின் பேரில் சகல கூட்டங்களிலும் பங்குபற்றுகின்றனர். தொழிற்சாலைகளின் தலைவர்களுக்கும், கம்பனியின் பிரிவுத் தலைவர்களுக்கும் கூட்டங்களுக்கு பங்குபற்றுவதற்கு அழைப்புவிடப்படுகின்றன.

வருடத்தின் போது நடைபெற்ற கூட்டங்களில் குழு உள்ளகக் கணக்காய்வு விசாரணைகளையும் மற்றும் மாதாந்த அறிக்கைகளையும் மீளாய்வு செய்து தொழிற்சாலைப் பிரதிநிதிகளினாலும் மற்றும் ஏனைய செயற்பாட்டுப் பிரதிநிதிகளினாலும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் ஊடாக காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் வழங்கப்பட்ட விளக்கங்களும் மற்றும் தெளிவுபடுத்தல்களும் பரீட்சிக்கப்பட்டதுடன், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் ஊடாக காட்டப்பட்டுள்ள குறைபாடுகளையும் மற்றும் தவறுகளையும் சீர்செய்வதற்கும் மற்றும் மீண்டும் அந்த குறைபாடுகளை எதிர்காலத்தில் செய்யாமல் இருப்பதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று குழு உள்ளகக் கணக்காய்வு விசாரணைகள் மற்றும் விரைவான பதில்களை அனுப்புதல் ஆகியன தொடர்பாக அவற்றுக்கு உரிய பணிகள் பற்றி பணியாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

குழுவினால் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளைப் பரிசீலனை செய்ததன் பின்னர் உள்ளகக் கணக்காய்வு அலுவலர்களுடன் கலந்துரையாடி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினைப் புதுப்பிப்பதற்கு தேவையான சிபாரிசுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தக் குழு வெளியகக் கணக்காய்வாளர்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற முகாமைத்துவ அறிக்கைகளை மீளாய்வு செய்து தவிசாளருக்கும், பிரதித் தவிசாளருக்கும் மற்றும் தொழிற்பாட்டுப் பணிப்பாளர்களுக்கும் முகாமைத்துவ அறிக்கையில் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ள சகல விடயங்களைப் பரீட்சித்து கம்பனியின பணிகளை மேம்படுத்துவதற்கு இந்த விடயங்கள் தொடர்பாக தேவையானதும், பொருத்தமானதுமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

**எஸ்.லோகநாதன்**
பதில் தலைவர் - கணக்காய்வுக் குழு
மில்கோ (பிறைவேற்) லிமிட்டெட்

# பணிப்பாளர் சபை



இடமிருந்து வலம்

திரு.டபிள்யு.ஜி.ஆர்.எச்.பண்டிதரத்ன – பணிப்பாளர், திரு.அஜித் திஸநாயக்க – பணிப்பாளர் – (Ph.D), திரு.திலங்க வீரசிங்க – பணிப்பாளர் – சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, சத்தியபிரமாண ஆணையாளர், திரு.கே சஞ்ஜய லீலாரத்ன – பிரதித் தவிசாளர், திரு.சுனில் விக்ரமசிங்க – தவிசாளர், திரு.நவ்ஷாட் ஜுனைடீன் – தொழிற்பாட்டு பணிப்பாளர், திரு.செல்வதுரை லோகநாதன் – பணிப்பாளர் – (UK) FSCMA (Sri Lanka), திருமதி தஷிக்கா எட்வேர்ட்ஸ் – பணிப்பாளர் பட்டம் (ஆங்கிலம்), திரு.ராஜூ சிவராம் – பணிப்பாளர் – M.Sc (Arch) FIA (Sri Lanka) சமூகமளிக்கவில்லை

**நிதிசார் கூற்றுக்கள் மீதான அறிக்கை**
2012 மார்ச் 31இல் உள்ளவாறு ஐந்தொகை மற்றும் வருமானக் கூற்று, ஒப்புரவில் மாற்றங்களின் கூற்று, மற்றும் அதன் போது முடிவடைந்த ஆண்டுக்கான பணப்புழக்கக் கூற்று, குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகளின் சாராம்சம், மற்றும் பக்கங்கள் 05-25 மீது குறித்துரைக்கப்பட்ட வேறு விளக்கத்திலான குறிப்புகள் ஆகியவற்றைக் கொண்டுள்ள மில்கோ (பிறைவேற்) லிமிட்டெட்டின் இணைந்துள்ள நிதிசார் கூற்றுக்களை நாம் கணக்காய்வு செய்துள்ளோம்.

**நிதிசார் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**
இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதும், நியாயமாகச சமர்ப்பிப்பதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். இப் பொறுப்பு பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது: மோசடி அல்லது தவறு ஆகியவற்றின் காரணமாக பொருள்ரீதியான தவறான கூற்று அற்ற நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்புக்கும், நியாயமான சமர்ப்பித்தலுக்கும் சம்பந்தப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைத்தல், அமுலாக்குதல் மற்றும் பராமரித்தல்; பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்தல், மற்றும் பிரயோகித்தல், சூழ்நிலைகளில் நியாயமானதாக விளங்கும் கணக்கீட்டு மதிப்பீடுகளைச் செய்தல்.

**கணக்காய்வின் நோக்கெல்லையும், கருத்தின் அடிப்படையும்**
எமது கணக்காய்வின் மீதான இந்த நிதிசார் கூற்றுக்களின் மீது கருத்தொன்றை வெளிப்படுத்துவதே எமது பொறுப்பாகும். பந்திகள் (அ), (உ) மற்றும் (ஊ) ஆகியவற்றில் கலந்துரையாடப்பட்டதற்கு புறநீங்கலாக, இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடன் ஒத்துப்போகும் முறையில், எமது கணக்காய்வை நாம் நடத்தினோம். பொருள்ரீதியான தவறான கூற்று இன்றி நிதிசார் கூற்றுக்கள் உள்ளனவா என்ற நியாயமான உறுதிப்படுத்தலைப் பெறுவதற்காக, நாம் கணக்காய்வைத் திட்டமிட்டு நிறைவேற்றுவதை இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிசார் கூற்றுக்களில் உள்ள தொகைகளையும், வெளிப்படுத்தல்களையும் ஆதரவளிக்கும் சான்றினை சோதனை அடிப்படையொன்றின் மீது பரீட்சிப்பதை கணக்காய்வொன்று உள்ளடக்குகின்றது. கணக்காய்வொன்று பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களை மதிப்பிடுவதையும், முகாமைத்துவத்தினால் செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளையும் அத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முழுமையான நிதிசார் கூற்றை மதிப்பாய்வதையும் உள்ளடக்குகின்றது.

பந்திகள் (அ), (உ) மற்றும் (ஊ) ஆகியவற்றில் கலந்துரையாடப்பட்டதற்கு புறநீங்கலாக, எமது கணக்காய்வின் நோக்கங்களுக்கு அவசியமானவையென எமது சிறந்த அறிவுக்கும், நம்பிக்கைக்குமான சகல தகவலையும், விளக்கங்களையும் நாம் பெற்றுள்ளோம். எனவே, எமது தகுதிவாய்ந்த கருத்திற்கு நியாயமான அடிப்படையொன்றை எமது கணக்காய்வு வழங்குகின்றது என நாம் நம்புகின்றோம்.

**கருத்து**

**(அ) ஆதனம், பொறி மற்றும் சாதனங்கள்**

முந்திய வருடத்திலிருந்து முன்கொண்டு வரப்பட்டதும், ஐந்தொகைத் திகதியன்றுள்ளவாறு ரூபா 35,335,028க்கான தொகையிலான நீண்ட நிலுவையிலான வைப்புப் பொறுப்புக்கு ஒத்திசைவிலானதுமான ரூபா 213,454,027க்கான தொகையிலான போத்தலையும், கூடைகளையும் சரிபார்ப்பதற்கு தோதான ஆவணங்களையும், வேறு பலப்படுத்தப்படுகின்ற சான்றுகளையும் நாம் பெறவில்லை. கம்பனிப் பதிவேடுகளின் தன்மையினதும், செயல்படுகின்ற வேறு கணக்காய்வு நடைமுறைகளினதும் காரணமாக பெறுமதிக்கும், ஐந்தொகைத் தினத்தில் உள்ளவாறு அத்தகைய சொத்துக்களினதும், ஒத்திசைவிலான பொறுப்பினதும் உளதாம்தன்மைக்கும் நாமாகவே திருப்தியடைய எமக்கு முடியாதிருந்தது.

**(ஆ) பொருட்பட்டியல்**

**முடிவுறுத்தப்பட்ட உற்பத்திப்பொருட்கள்/மூலப்பொருள் மற்றும் பாவனைக்குரியவை**
ரூபா 125,391,410, ரூபா 145,632,097 மற்றும் ரூபா 203,408,433 தொகையிலான முறையே முடிவுறுத்தப்பட்ட உற்பத்திப்பொருட்களும், மூலப்பொருளும் மற்றும் பாவனைக்குரியவையும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப மதிப்பிடப்படவில்லை. கம்பனியின் பதிவேடுகளின் தன்மையின் காரணமாக பொருட்பட்டியல் மீது அத்தகைய சீராக்கலின் விளைவினை எம்மால் நிர்ணயிக்க முடியவில்லை.

**(இ) வர்த்தக மற்றும் வேறு கிடைக்கவேண்டியவை**

அறவிடல் சந்தேகத்திற்குரியது என்ற போதிலும், ரூபா 23,757,824 தொகையில் நீண்ட நிலுவையிலான முன்கொடுப்பனவுகள் தொடர்பில் ஏதாவது கிடைக்காததும், சந்தேகத்திற்குரியதுமான கடன்களுக்கு போதியளவு ஏற்பாடு செய்யப்படவில்லை.

கம்பனிப் பதிவேடுகளின் தன்மையின் காரணமாகவும், வேறு கணக்காய்வு நடைமுறைகளை நிறைவேற்றுவதன் மூலமும் ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறு அத்தகைய கிடைக்க வேண்டிய மீதிகளின் பெறுமதிக்கும், உளதாம்தன்மைக்கும் நாமாகவே திருப்தியடைய எமக்கு முடியாதிருந்தது.

**(ஈ) பின்போடப்பட்ட வரிச் சொத்து/பொறுப்பு**

இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு அமைவாக ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறு பின்போடப்பட்ட வரிச் சொத்து/பொறுப்பு தொடர்பில் போதியளவு ஏற்பாடு செய்யப்படவில்லை.

**(உ) கடன்களையும், இரவல்களையும் தாங்குகின்ற வட்டி/வட்டி சாராத தாங்குகின்ற கடன்கள் மற்றும் இரவல்கள்**

கமத்தொழில், கால்நடை அபிவிருத்தி அமைச்சுக்கு ரூபா 83,590,654 தொகையிலான கொடுப்பனவுக்குரிய மீதியின் உளதாம்தன்மையையும், செம்மையையும் சுதந்திரமாகச் சரிபார்ப்பதற்கு நேரடியான உறுதிப்படுத்தல்கள் போன்ற திருப்திகரமான சான்றினை நாம் பெறவில்லை.

கம்பனிப் பதிவேடுகளின் தன்மையின் காரணமாகவும், வேறு கணக்காய்வு நடைமுறைகளை நிறைவேற்றுவதன் மூலமும் ஐந்தொகை திகதியில் உள்ளவாறு அத்தகைய கிடைக்க வேண்டிய மீதிகளின் முழுமைத்தன்மைக்கும், உளதாம்தன்மைக்கும் நாமாகவே திருப்தியடைய எமக்கு முடியாதிருந்தது.

**(ஊ) வர்த்தக மற்றும் வேறு கொடுப்பனவுக்குரியவை**

மிருக உற்பத்தி, சுகாதாரத் திணைக்களத்திற்கு ரூபா 20,446,164 தொகையிலான கொடுப்பனவுக்குரிய மீதியின் உளதாம்தன்மையையும், செம்மையையும் சுதந்திரமாகச் சரிபார்ப்பதற்கு நேரடியான உறுதிப்படுத்தல்கள் போன்ற திருப்திகரமான சான்றினை நாம் பெறவில்லை.

கம்பனிப் பதிவேடுகளின் தன்மையின் காரணமாகவும், வேறு கணக்காய்வு நடைமுறைகளை நிறைவேற்றுவதன் மூலமும் ஐந்தொகை திகதியில் உள்ளவாறு அத்தகைய கிடைக்க வேண்டிய மீதிகளின் முழுமைத்தன்மைக்கும், உளதாம்தன்மைக்கும் நாமாகவே திருப்தியடைய எமக்கு முடியாதிருந்தது.

எமது கருத்தின் படி, பந்திகள் (அ), (உ) மற்றும் (ஊ) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களையிட்டு எம்மால் திருப்திகொள்வதற்கு இயலக்கூடியதாக இருப்பதாக நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு ஏதாவது இருந்தால், அத்தகைய சீராக்கல்களின் விளைவு புறநீங்கலாக, எமது பரீட்சையிலிருந்து இதுவரை தோன்றுகின்றவாறும், பந்திகள் (ஆ), (இ) மற்றும் (ஈ) ஆகியவற்றுக்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் நிதிசார் கூற்றுக்கள் மீதான விளைவுகள் புறநீங்கலாகவும் 2012 மார்ச் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கு தோதான கணக்கீட்டு பதிவேடுகளை கம்பனி பராமரித்ததுடன், 2012 மார்ச் 31இல் உள்ளவாறு கம்பனியின் அலுவல்களின் நிலையையிட்டும், அப்போது முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நஷ்டத்தையும் மற்றும் பணப்புழக்கத்தையும் இட்டு இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப உண்மையானதும், நியாயமானதுமான கருத்தினை நிதிசார் கூற்றுக்கள் வழங்குகின்றன.

**விடயத்தின் வலியுறுத்தல்**
எமது கருத்தினை மேலும் சாட்டாமல், நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 13.5 மற்றும் 22 ஆகியவற்றுக்கு நாம் கவனத்தை முன்வைக்கின்றோம்.

**வேறு சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**
2007இன் கம்பனிகள் சட்டம் இல.07இன் பிரிவு 151 (2)இன் தேவைப்பாட்டுடன் இந்நிதிசார் கூற்றுக்கள் இணங்குகின்றன.

BDO Partners

**பட்டயக் கணக்காளர்கள்**
கொழும்பு
28 நொவம்பர் 2012

**மில்கோ (பிறைவேற்) லிமிட்டெட்**
**வருமானக் கூற்று**
**2012 மார்ச் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கு**

# வருமானக் கூற்று 2012 மார்ச் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கு

| | குறிப்புகள் | 2011/2012 ரூபா | 2010/2011 ரூபா |
|---|---|---|---|
| வருமானம் | 3 | 5,263,152,211 | 4,548,974,053 |
| விற்பனையின் ஆகுசெலவு | | (5,013,827,195) | (4,012,024,624) |
| மொத்த இலாபம் | | 249,325,016 | 536,949,429 |
| வேறு வருமானம் | 4 | 167,245,922 | 100,440,617 |
| | | 416,570,938 | 637,390,046 |
| நிருவாகச் செலவினங்கள் | | (500,006,174) | (413,113,697) |
| பங்கீட்டுச் செலவினங்கள் | | (73,073,775) | (66,130,740) |
| வேறு செலவினங்கள் | | (23,205,858) | (31,977,865) |
| நிதி ஆகுசெலவுகள் | 5 | (35,805,724) | (15,504,264) |
| | | (632,091,530) | (526,726,566) |
| வரிவிதிப்புக்கு முன் (நஷ்டம்)/இலாபம் | 6 | (215,520,592) | 110,663,480 |
| வருமான வரிச் செலவினம் | 7 | (10,917,993) | (27,471,930) |
| ஆண்டுக்கான(நஷ்டம்)/இலாபம் | | (226,438,585) | 83,191,550 |
| பங்கொன்றுக்கு அடிப்படை (நஷ்டம்)/சம்பாத்தியங்கள் | 8 | (7.09) | 2.60 |

அடைப்புக்குறிக்குள் உள்ள எண்ணிக்கைகள் கழித்தல்களை எடுத்துக்காட்டுகின்றன.

கணக்கீட்டுக் கொள்கைகளும், பக்கங்கள் 5இலிருந்து 25 வரையிலான குறிப்புக்களும் இந் நிதிசார் கூற்றுக்களின் முழுமையான பாகமொன்றாக அமைகின்றன.

28 நொவம்பர், 2012
கொழும்பு

# ஐந்தொகை 2012 மார்ச் 31இல் உள்ளவாறு

| | குறிப்புகள் | 2011/2012இல. உள்ளவாறு ரூபா | 2010/2011இல் உள்ளவாறு ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறைசாரா சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறி மற்றும் சாதனங்கள் | 09 | 831,623,199 | 532,747,937 |
| நடந்துகொண்டிருக்கும் மொத்த வேலை | 10 | 497,637,177 | 19,366,961 |
| நீண்ட கால முதலீடு | 14 | 839,160,352 | - |
| | | 2,168,420,728 | 552,114,898 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| கால்நடை | 11 | 305,900 | 1,431,645 |
| பொருட்பட்டியல்கள் | 12 | 483,296,739 | 347,851,960 |
| வர்த்தக மற்றும் வேறு கிடைக்கவேண்டியவைகள் | 13 | 1,123,463,869 | 895,480,728 |
| குறுகிய கால முதலீடு | 14 | 175,100,000 | 930,623,649 |
| பணம் மற்றும் பணச் சமப்படுத்தல்கள் | 15 | 33,007,766 | 394,346,782 |
| | | 1,815,174,273 | 2,569,734,764 |
| மொத்தச் சொத்துக்கள் | | 3,983,595,001 | 3,121,849,662 |
| **ஒப்புரவு மற்றும் பொறுப்புக்கள்** | | | |
| **குறிப்பிடப்பட்ட முதலீடு மற்றும் ஒதுக்குகள்** | | | |
| குறிப்பிடப்பட்ட முதலீடு | 16 | 319,454,060 | 319,454,060 |
| மூலதன ஒதுக்கீடு | 17 | 25,000,000 | 25,000,000 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கு | | 336,454,462 | 336,454,462 |
| ஆழ் நிதியம் | 18 | 1,689,978 | 1,689,978 |
| தக்கவைக்கப்பட்டுள்ள சம்பாத்தியங்கள் | | 964,840,393 | 1,191,278,978 |
| பங்குதாரர் நிதியம் | | 1,647,438,893 | 1,873,877,478 |
| **நடைமுறைசாராப் பொறுப்புக்கள்** | | | |
| வட்டியின்மையைத் தாங்குகின்ற இரவல்கள் | 19 | 85,698,717 | 85,698,717 |
| வட்டியைத் தாங்குகின்ற இரவல்கள் - நீண்ட காலம் | 19 | 642,228,098 | - |
| இளைப்பாற்று நன்மை கடப்பாடுகள் - பணிக்கொடை | 20 | 338,682,103 | 201,703,631 |
| பிற்போடப்பட்ட வருமானம் - அரசாங்க உதவுதொகை | 21 | 15,497,684 | 20,757,825 |
| | | 1,082,106,602 | 308,160,173 |
| **நடைமுறையிலான பொறுப்புக்கள்** | | | |
| வர்த்தக மற்றும் வேறு கொடுப்பனவுக்குரியவை | 22 | 862,317,139 | 823,121,208 |
| கொடுப்பனவுக்குரிய வருமான வரி | 23 | 19,455,329 | 27,758,202 |
| வட்டியிலான இரவல்கள் - குறுகிய காலம் | 19 | 86,668,946 | 423,240 |
| வங்கி மேலதிகப் பற்றுக்கள் | 24 | 285,608,091 | 88,509,361 |
| | | 1,254,049,506 | 939,812,011 |
| மொத்த ஒப்புரவு மற்றும் பொறுப்புக்கள் | | 3,983,595,001 | 3,121,849,662 |

அடைப்புக்குறிக்குள் உள்ள எண்ணிக்கைகள் கழித்தல்களை எடுத்துக்காட்டுகின்றன.
ஒப்புரவுகள் மற்றும் எதிர்பாராதவை 25 & 26

கணக்கீட்டுக் கொள்கைகளும், பக்கங்கள் 5இலிருந்து 25 வரையிலான குறிப்புக்களும் இந் நிதிசார் கூற்றுக்களின் முழுமையான பாகமொன்றாக அமைகின்றன.

2007இன் இல.7 கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்க, இந்த நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என நான் உறுதிப்படுத்துகின்றேன்.

**திரு.சி.மடுகல்ல**
நிதி கட்டுப்பாட்டாளர்

இந்த நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்புக்கும் சமர்ப்பணத்திற்கும் பணிப்பாளர் சபை பொறுப்பானதாகும்.

சபைக்காகவும், சபையின் சார்பாகவும் அங்கீகரிக்கப்பட்டு ஒப்பமிடப்பட்டுள்ளது.

**திரு.எஸ்.சி.எஸ்.விக்ரமசிங்க**
தவிசாளர்

**திரு.எஸ்.லோகநாதன்**
பணிப்பாளர்

28 நொவம்பர், 2012
கொழும்பு

## ஒப்புரவில் மாற்றங்களின் கூற்று 2012 மார்ச் 31இல் உள்ளவாறு

| | குறிப்பிடப் பிடப்பட்ட மூலதனம் | மூலதன ஒதுக்குகள் | மீள் மதிப்பீட்டு ஒதுக்கு | ஆழ் நிதியம் | நிறுத்தி வைக்கப்பட்ட சம்பாத்தி யங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 31.03.2010இல் உள்ளவாறு மீதி | 319,454,060 | 25,000,000 | 336,454,462 | 1,689,978 | 1,108,087,428 | 1,790,685,928 |
| ஆண்டுக்கான தேறிய இலாபம் | - | - | - | - | 83,191,550 | 83,191,550 |
| 31.03.2010இல் உள்ளவாறு மீதி | 319,454,060 | 25,000,000 | 336,454,462 | 1,689,978 | 1,191,278,978 | 1,873,877,478 |
| ஆண்டுக்கான தேறிய நஷ்டம் | - | - | - | - | (226,438,585) | (226,438,585) |
| 31.03.2010இல் உள்ளவாறு மீதி | 319,454,060 | 25,000,000 | 336,454,462 | 1,689,978 | 964,840,393 | 1,647,438,893 |

அடைப்புக்குறிக்குள் உள்ள எண்ணிக்கைகள் கழித்தல்களை எடுத்துக்காட்டுகின்றன.

கணக்கீட்டுக் கொள்கைகளும், பக்கங்கள் 5இலிருந்து 25 வரையிலான குறிப்புக்களும் இந் நிதிசார் கூற்றுக்களின் முழுமையான பாகமொன்றாக அமைகின்றன.

28 நொவம்பர், 2012
கொழும்பு

| | 2011/2012 ரூபா | 2010/2011 ரூபா |
|---|---|---|
| **தொழிற்படுத்தல் செயற்பாடுகளிலிருந்து பணப்புழக்கங்கள்** | | |
| வரிவிதிப்பின் முன்னரான நிகர (நஷ்டம்)/இலாபம் | (215,520,592) | 110,663,480 |
| பின்வருவனவற்றுக்கு சீராக்கல்கள்: | | |
| - ஆதனம், பொறி மற்றும் சாதனம் மீதான மதிப்பிறக்கம் | 123,306,838 | 158,638,553 |
| - மூலதனங்களிலிருந்து வருமானம் | (83,767,183) | (88,453,539) |
| - வட்டிச் செலவினம் | 29,484,038 | 964,195 |
| - பிற்போடப்பட்ட உதவுதொகைகள் மீதான அங்கீகரிக்கப்பட்ட வருமானம் | (400,600) | (9,669,546) |
| - பெறுமதியழிக்கப்பட்ட கையிருப்பு | - | 260,681 |
| - கால்நடை மீது நஷ்டம் மற்றும் நியாயப் பெறுமதி சீராக்கல் | 15,835 | |
| - தேறாத செலாவணி இலாபம் | (75,077,781) | 15,171,011 |
| - கிடைக்காததும், சந்தேகத்திற்குரியதுமான கடன்களுக்கான ஏற்பாடு | 1,164,172 | |
| - வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டங்களுக்கான ஏற்பாடு - பணிக்கொடை | 140,373,568 | 85,457,151 |
| | 135,098,887 | 162,368,505 |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன் தொழிற்படுகின்ற இலாபம்** | (80,421,704) | 273,031,985 |
| பொருட்பட்டியலில் (அதிகரிப்பு)/குறைப்பு | (135,444,779) | 179,093,535 |
| வர்த்தக மற்றும் வேறு கிடைக்கவேண்டியவைகளில் (அதிகரிப்பு)/குறைப்பு | (199,163,892) | (108,902,258) |
| வர்த்தக மற்றும் வேறு கொடுப்பனவுக்குரியவைகளில் (அதிகரிப்பு)/குறைப்பு | 39,195,931 | 13,745,411 |
| | (295,412,739) | 83,936,688 |
| **தொழிற்பாடுகளிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட பணம்** | (375,834,444) | 356,968,674 |
| கொடுப்பனவாகிய வட்டி | (29,478,528) | - |
| கொடுப்பனவாகிய வரி | (22,712,603) | (42,533,303) |
| வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டங்களின் கொடுப்பனவு - பணிக்கொடை | (3,395,096) | (8,851,220) |
| | (55,586,227) | (51,384,523) |
| தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து/(பயன்படுத்தப்பட்ட) தேறிய பணப்புழக்கம் | (431,420,671) | 305,584,151 |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து பணப்புழக்கம்** | | |
| ஆதனம், பொறி மற்றும் சாதனங்களின் கையகப்படுத்தல் | (35,228,612) | (112,835,181) |
| நிருமாணத்தின் போது ஆதனம், பொறி மற்றும் சாதனங்களில் முதலீடுகள் | (761,477,220) | (26,831,253) |
| கால்நடையின் விற்றொழித்தலிலிருந்து வரும்படிகள் | 1,109,910 | - |
| கிடைத்த வட்டி | 44,321,466 | 85,078,392 |
| குறுகிய கால மற்றும் நீண்ட கால முதலீட்டிலிருந்து மீளப்பெறல்/(புதிய) | (8,558,922) | (223,197,127) |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து/(பயன்படுத்தப்பட்ட) தேறிய பணம்** | (759,833,378) | (277,785,169) |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்து பணப்புழக்கம்** | | |
| கிடைத்த அரசாங்க உதவுதொகை | 8,094,492 | 7,860,285 |
| கொடுப்பனவாகிய குத்தகை வாடகை | (428,749) | - |
| கடன்களிலிருந்தும், இரவல்பெறல்களிலிருந்தும் வரும்படிகள் - (மீள்கொடுப்பனவுகளின் தேறிய) | 625,150,559 | (5,144,988) |
| நிதிப்படுத்தல் செயற்பாடுகளிலிருந்து/(பயன்படுத்தப்பட்ட) தேறிய பணப்புழக்கம் | 632,816,302 | 2,715,297 |
| பணம் மற்றும் பண சமப்படுத்தல்களில் தேறிய அதிகரிப்பு | (558,437,747) | 30,514,279 |
| ஆண்டின் ஆரம்பத்தில் பணம் மற்றும் பணச்சமப்படுத்தல்கள் | 305,837,421 | 281,793,973 |
| ஆண்டின் இறுதியில் பணம் மற்றும் பணச்சமப்படுத்தல்கள் | (252,600,325) | 305,837,421 |
| **ஆண்டின் ஆரம்பத்தில்** | | **குறிப்பு A** |
| வங்கிகளில் மீதிகள் | 393,001,398 | 367,468,275 |
| கையில் சில்லறைப் பணம் | 1,345,384 | 556,670 |
| | 394,346,782 | 368,024,945 |
| வங்கி மேலதிக பற்றுக்கள் | (88,509,361) | (86,230,973) |
| | 305,837,421 | 281,793,972 |
| **ஆண்டின் இறுதியில்** | | **குறிப்பு B** |
| வங்கிகளில் மீதிகள் | 29,892,575 | 393,001,398 |
| கையில் சில்லறைப் பணம் | 3,115,191 | 1,345,384 |
| | 33,007,766 | 394,346,782 |
| வங்கி மேலதிக பற்றுக்கள் | (285,608,091) | (88,509,361) |
| | (252,600,325) | 305,837,421 |

அடைப்புக்குறிக்குள் உள்ள எண்ணிக்கைகள் கழித்தல்களை எடுத்துக்காட்டுகின்றன.

கணக்கீட்டுக் கொள்கைகளும், பக்கங்கள் 5இலிருந்து 25 வரையிலான குறிப்புக்களும் இந் நிதிசார் கூற்றுக்களின் முழுமையான பாகமொன்றாக அமைகின்றன.

28 நொவம்பர், 2012
கொழும்பு

## 1. கூட்டுக்குழு தகவல்

### 1.1 பொது

இலங்கையில் இயங்கி வருவதும், ஒன்றிணைக்கப்பட்டதுமான வரையறுக்கப்பட்ட பொறுப்பு கம்பனி மில்கோ (பிறைவேற்) லிமிட்டெட் ஆகும்.

இக் கம்பனி 1996 மே 9இல் ‘கிரியா மில்க் இன்டஸ்ரீஸ் ஒப் லங்கா (பிறைவேற்) லிமிற்றெற்’ என்ற பெயரின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டது. 2001 ஜுலை 23இலிருந்து செயற்படத்தக்கதாக இந்தக் கம்பனியின் பெயர் ‘மில்கோ (பிறைவேற்) லிமிற்றெற்’ என மாற்றப்பட்டது. இலங்கை அரசாங்கத்திற்கும், இந்திய தேசிய பாற்பண்ணைச் சபைக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின்படி, 1998 பெப்ரவரி 3இல் உள்ளவாறு மில்க் இன்டஸ்ரீஸ் ஒப் லங்கா கம்பனி லிமிற்றெற்றுக்குச் சொந்தமாயிருந்து, அந்தக் கம்பனியினால் பயன்படுத்தப்பட்டு வந்த அனைத்துச் ஆதனமும், பொறிகளும், சாதனங்களும் (காணி நீங்கலாக), அதே திகதியன்று உள்ளவாறு வரையறுக்கப்பட்ட இலங்கை பால் கைத்தொழில்கள் கம்பனியினால் பயன்படுத்தப்பட்ட நிலங்களினதும், கட்டிடங்களினதும் குத்தகை ஆதன உரிமைகளும் 1998 பெப்ரவரி 4 அன்று கம்பனிக்குக் கைமாற்றப்பட்டது. இவ்வாறு கைமாற்றப்பட்ட தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 306,500,020 ஆகும். மேலும், இலங்கை அரசாங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழுவிடமிருந்து 2000 ஆகஸ்ட் 8 அன்று கிடைத்த கடிதத்தின் படி இறையிலி காணிகளினதும், கட்டிடங்களினதும் 20,427,900/- ரூபாவைக் கொண்ட வருடாந்தக் குத்தகை வாடகைக்காக அமைச்சரவை தீர்மானம் ஒன்றின் மூலம் விட்டுக்கொடுக்கப்பட்டது. கூட்டு முயற்சி உடன்படிக்கை இன்று அமுலில்லாத போதும், சொல்லப்பட்ட அரசாங்கக் காணிகளினதும், கட்டிடங்களினதும் கணக்குகளில் பொருத்தமான சீராக்கல்களை கம்பனி செய்யவில்லை.

கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 45, நாவல வீதி, கொழும்பு 05 என்ற விலாசத்தில் அமைந்துள்ளது. வியாபாரம் நடைபெறும் பிரதான நிலையமும் இங்கே தான் உள்ளது. கம்பனியின் முக்கிய தொழிற்சாலைகள் நாரஹேன்பிட்டி, அம்பேவல, திகன மற்றும் பொலன்னறுவை ஆகிய இடங்களில் இயங்குகின்றன.

### 1.2. பிரதான நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளின் தன்மை

பாலைச் சேகரித்து, பதனிட்டு, பொதி செய்து விநியோகிப்பதும், பால் உற்பத்திப்பொருள்களை விற்பனை செய்வதுமே வருடத்தின் போது கம்பனியின் முக்கிய நடவடிக்கைகளாக இருந்தன.

## 2. குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் சாராம்சம்

### 2.1 பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

#### 2.1.1 தயாரிப்பின் அடிப்படை

சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந் நிதிசார் கூற்றுக்கள், இலங்கை ரூபாய்களில் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள பொதுவாக ஏற்றுக்கொள்ளத்தக்க கணக்கீட்டுக் கோட்பாடுகளினதும், நியமங்களினதும் பிரகாரம் வரலாற்றுரீதியிலான ஆகுசெலவு அடிப்படையின் கீழ் திரண்ட அடிப்படையின் மீது தயாரிக்கப்பட்டுள்ளன.

#### 2.1.2 இணக்கத்தின் கூற்று

2012 மார்ச் 31இல் உள்ளவாறும், அப்போது முடிவடைந்த ஆண்டுக்கும் கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைகளுடனும், குறிப்புக்களுடனும் (“நிதிசார் கூற்றுக்கள்”) சேர்த்து ஐந்தொகை, வருமானத்தின் கூற்று, ஒப்புரவில் மாற்றங்கள் மற்றும் பணப் பாய்வுகள் ஆகியன இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனும், 2007இன் இல.7 கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் தேவைப்பாட்டுடனும் இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

#### 2.1.3 ஒப்பீட்டுரீதியிலான தகவல்

நிறுவனத்தினால் கணக்கீட்டுக் கொள்கைகள் உறுதியாகப் பிரயோகிக்கப்படுவதுடன், முந்திய ஆண்டுள்ளவற்றுடன் உறுதியாகவுள்ளன. நடைமுறை ஆண்டின் சமர்ப்பபணத்திற்கு இணங்குவதற்காக அவசியப்படுமிடத்து முந்திய ஆண்டு தொகைகளும், வாசகங்களும் மீள்-ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

### 2.2 சொத்துக்கள் மற்றும் அவற்றின் மதிப்பீட்டின் அடிப்படைகள்

### 2.2.1 ஆதனம், பொறிகள் மற்றும் சாதனங்கள்

**அ) ஆகுசெலவு**

திரண்ட மதிப்பிறக்கம் கழிக்கப்பட்டதும், பெறுமதியில் ஏதாவது குறைபாடு இன்றியும் ஆதனங்களும், பொறிகளும் மற்றும் சாதனங்களும் ஆகுசெலவில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

**ஆ) ஆகுசெலவு மற்றும் மதிப்பீடு**

ஆதனங்களினதும், பொறிகளினதும் மற்றும் சாதனங்களினதும் சகல விடயங்களும் ஆரம்பத்தில் ஆகுசெலவில் பதிவுசெய்யப்படுகின்றன. அதைத் தொடர்ந்து ஆதனத்தினதும், பொறிகளினதும் மற்றும் சாதனங்களினதும் விடயங்கள் மீள்-மதிப்பிடப்படுமிடத்து, அத்தகைய சொத்துக்களின் முழு வகுப்பும் மீள்-மதிப்பிடப்படுகின்றன.

**இ) மதிப்பிறக்கம்**

அத்தகைய சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுளுக்கு மேலாக அத்தகைய தொகைகளைப் பெறுமதியளிக்குமுகமாக இறையிலி காணியைத் தவிர, சகல ஆதனத்தினதும், பொறிகளினதும் மற்றும் சாதனங்களினதும் ஆகுசெலவு மற்றும் மதிப்பீடு ஆகியன மீது நேர்கோட்டை முறையைப் பயன்படுத்துவதன் மூலம் மதிப்பிறக்கத்திற்கான ஏற்பாடு கணக்கிலிடப்படுகின்றது.

நிதிக் குத்தகையின் கீழ் தக்கவைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் குறைந்த குத்தகைக் காலத்திற்கு அல்லது சமமான சொந்தச் சொத்துக்களின் பயனுள்ள ஆயுளுக்கு மேலாக மதிப்பிறக்கப்படுகின்றன.

முற்போந்த ஆண்டுகளுடன் இணங்குகின்ற இந் நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்ட பிரதான வருடாந்த வீதங்கள் வருமாறு:

| | |
|---|---|
| கட்டிடங்கள் | 20 வருடங்களுக்கு மேல் |
| பொறி, இயந்திராதிகள் | 06 வருடங்களுக்கு மேல் 10 வருடங்கள் வரை |
| தளபாடங்கள், பொருத்திகள் | 03 வருடங்களுக்கு மேல் 05 வருடங்கள் வரை |
| ஆய்வுகூட உபகரணங்கள் | 03 வருடங்களுக்கு மேல் 05 வருடங்கள் வரை |
| மோட்டார் வாகனங்கள் | 02 வருடங்களுக்கு மேல் 04 வருடங்கள் வரை |
| கருவிகள், உபகரணங்கள் | 03 வருடங்களுக்கு மேல் 10 வருடங்கள் வரை |
| அலுவலக உபகரணங்கள் | 2.5 வருடங்களுக்கு மேல் 05 வருடங்கள் வரை |
| போத்தல்கள், கூடைகள் | 04 வருடங்களுக்கு மேல் |
| கணனிகள் | 02-04 வருடங்களுக்கு மேல் |
| போத்தல் குளிரூட்டிகள் | 2.5-05 வருடங்களுக்கு மேல் |
| மென்கணியம் | 03 வருடங்களுக்கு மேல் |
| பால் கொள்கலன்கள் | 05 வருடங்களுக்கு மேல் |

பாவனைக்கு அது கிட்டுகின்ற போது சொத்துக்களின் மதிப்பிறக்கம் ஆரம்பமாவதுடன், விற்பனைக்காக கொண்டுள்ளவாறு சொத்து வகைப்படுத்தப்பட்டுள்ள திகதியின் ஆரம்பத்தில் அத்துடன், சொத்து அங்கீகாரத்தை மீளப்பெறுதல் திகதியில் இடைநின்றுவிடுகின்றது.

சொத்தின் எஞ்சிய பெறுமதிகள், பயனுள்ள ஆயுள் மற்றும் மதிப்பிறக்கத்தின் முறைகள் ஆகியன ஒவ்வொரு நிதிசார் ஆண்டிலும் மதிப்பிடப்பட்டு, பொருத்தமென்றால் சீராக்கப்படுகின்றன.

**ஈ) புதுப்பித்தல் ஆகுசெலவுகள்**

செயற்றிறனின் மூலத்திலான மதிப்பிடப்பட்ட நியமத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் எதிர்காலப் பொருளாதார நன்மைகளைப் புதுப்பிக்குமுகமாக அல்லது பேணுமுகமாக ஆதனங்களினதும், பொறிகளினதும் மற்றும் சாதனங்களினதும் பழுதுபார்த்தல்களின் அல்லது பராமரிப்பின் மீது ஏற்படுகின்ற செலவினம் இடம்பெறுகின்ற போது அது செலவினமொன்றாக அங்கீகரிக்கப்படுகின்றது.

**உ) அங்கீகாரத்தை மீளப்பெறுதல்**

விற்றொழிக்கப்படும் போது அல்லது அதன் உபயோகத்தில் அல்லது விற்றொழித்தலிலிருந்து எதிர்காலப் பொருளாதார நன்மைகள் எதிர்பார்க்கப்படாத போது ஆதனங்களின், பொறிகளின் மற்றும் சாதனங்களின் விடயமொன்றின் அங்கீகாரம் மீளப்பெறப்படுகின்றது. சொத்தின் அங்கீகாரம்

மீளப்பெறப்படுதல் மீது எழுகின்ற ஏதாவது ஆதாயம் அல்லது இழப்பு நிகர விற்றொழித்தல் வரும்படிக்கும், காவும் தொகைக்கும் இடையிலான வித்தியாசமாகக் கணக்கிடப்படுகின்றது.

### 2.2.2 குத்தகைகள்

**அ) நிதிக் குத்தகைகள் - கம்பனி குத்தகைப் பெறுனராக இருக்குமிடத்து**

உரித்துரிமைக்கு இடைநேருகின்ற சகல அபாயங்களுக்கும், வெகுமதிகளுக்கும் அந்தக் கைமாற்றத்தை கணிசமானளவு அனுமானிக்கின்ற குத்தகைகள் நிதிக் குத்தகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன. நிதிக் குத்தகையொன்றின் வழியினால் திரட்டப்பட்ட சொத்துக்கள் திரண்டுள்ள மதிப்பிறக்கமும், திரண்டுள்ள குறைபாட்டு நஷ்டங்களும் கழிக்கப்பட்டு, ஆரம்பத்தில் குறைந்தபட்ச குத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதியில் அல்லது குறைவடைந்த அவற்றின் நியாயமான பெறுமதிக்குச் சமமான தொகையொன்றில் அளவிடப்படுகின்றது.

குத்தகைக்காரருக்கு கொடுப்பனவுக்குரிய ஒத்திசைவிலான பிரதான தொகையானது பொறுப்பொன்றாகக் காட்டப்பட்டுள்ளது. எதிர்கால பருவங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிக் கட்டணங்கள் குறிப்புகளில் புறம்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

ஒவ்வொரு நிதிசார் ஆண்டுக்கும் பிரயோகிக்கத்தக்க வாடகைக் கடப்பாட்டின் வட்டி அம்சமானது ஒவ்வொரு பருவத்திற்கும் பொறுப்பின் எஞ்சியுள்ள மீதி மீதான வட்டி உறுதியான இடையிடையில் நிகழ்கின்ற வீதமொன்றை முன்வைக்கும் விதத்தில் குத்தகைக் காலத்திற்கு மேலாக வருமானக் கூற்றுக்கு சுமத்தப்பட்டுள்ளது.

குத்தகையிலான ஆதனத்திற்கான அல்லது அதன் மீதான மேம்படுத்தல்களின் ஆகுசெலவு குத்தகையின் காலாவதியாகாத காலத்தின் அல்லது மேம்படுத்தல்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுளின் எது குறைவானதோ அதன் மேலாக மூலதனமிடப்பட்டு, மதிப்பிறக்கப்படுகின்றது.

நிதிக் குத்தகையொன்றில் விற்பனையொன்று அத்துடன் குத்தகையை மீளப்பெறல் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் சொத்துக்களின் காவும் தொகைக்கு மேலாக விற்பனை வரும்படிகளின் ஏதாவது மேன்மிகையானது குத்தகைத் தவணைக்கு மேலாக பின்போடப்பட்டு, பெறுமான பதிவழிக்கப்படுகின்றது.

**ஆ) தொழிற்படுத்தல் குத்தகைகள்**

குத்தகையிலான தவணையின் கீழ் சொத்தொன்றின் சகல அபாயத்தையும், வெகுமதிகளையும் கணிசமானளவு கடன்வழங்குனர் விளைதிறனுடன் தக்கவைக்கின்ற குத்தகைகள் தொழிற்படுகின்ற குத்தகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

தொழிற்படுகின்ற குத்தகைகளின் கீழ் கொடுப்பனவாகின்ற குத்தகைக் கொடுப்பனவுகள் (காப்புறுதி மற்றும் பராமரிப்பு போன்ற சேவையின் ஆகுசெலவு புறநீங்கலாக) நேர்கோட்டு அடிப்படையொன்றின் மீது குத்தகைக் காலத்திற்கு மேலாக வருமானக் கூற்றில் செலவினமொன்றாக அங்கீகரிக்கப்படுகின்றன.

### 2.2.3 சொத்துக்களின் குறைபாடு

சொத்தொன்று குறைபாடடையுமா என்பதற்கு எடுத்துக்காட்டொன்றுள்ளதா என்பதை ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியில் கம்பனி மதிப்பிடுகின்றது. இத்தகைய எடுத்துக்காட்டு நிலவினால் அல்லது சொத்தொன்றுக்காக வருடாந்த குறைபாட்டு சோதித்தல் அவசியப்படும் போது சொத்தின் அறவிடக்கூடிய தொகையின் மதிப்பீடொன்றை கம்பனி செய்கின்றது. விற்பதற்கான ஆகுசெலவுகளும், உபயோகத்தில் அதன் பெறுமதியும் சொத்தொன்றின் அல்லது கழிக்கப்பட்ட பணத்தைத் தோற்றுவிக்கும் அலகு நியாயப் பெறுமதியையும் விட சொத்தொன்றின் அளவிடக்கூடிய தொகை உயர்வானது என்பதுடன், ஏனைய சொத்துக்களிலிருந்து அல்லது சொத்துக்களின் குழுவிலிருந்து பெரிதுமே சுயேட்சையான பணப் பாய்வினை சொத்துக்கள் தோற்றுவிக்காவிட்டால் அன்றி, தனிப்பட்ட சொத்தொன்றுக்காக நிர்ணயிக்கப்படுகின்றது. அதன் அறவிடக்கூடிய தொகையை சொத்தொன்றின் காவும் தொகை மீறுமிடத்து, சொத்து குறைபாடாகக் கருதப்படுவதுடன், அதன் அறவிடக்கூடிய தொகைக்கு எழுதப்படுகின்றது. பாவனையில் உள்ள பெறுமதியை மதிப்பிடுகையில், பணத்தின் நேரப் பெறுமதியின் நடைமுறையிலான சந்தை மதிப்பீட்டினையும், சொத்துக்கு குறிப்பான அபாயத்தையும் பிரதிபலிக்கும் வரிக்கு முந்திய கழிவொன்றைப் பயன்படுத்தி அவற்றின் தற்போதைய பெறுமதிக்கு மதிப்பிடப்பட்ட எதிர்காலப் பணப்பாய்வுகள் கழிக்கப்படும். மதிப்பீட்டுப் பெருக்கங்கள், கூறுவிலையிடப்பட்ட பங்கு விலைகள் அல்லது வேறு கிட்டுகின்ற நியாயப் பெறுமதி எடுத்துக்காட்டுக்கள் ஆகியவற்றினால் இக் கணக்கெடுப்புக்கள் இணைந்து செய்யப்படுகின்றன.

ஒப்புரவுக்கு மீள்-மதிப்பீடு எடுக்கப்படுமிடத்து, ஏற்கனவே மீள்-மதிப்பிடப்பட்ட ஆதனம் புறநீங்கலாக குறைபாட்டுச் சொத்தின் தொழிற்பாட்டுடன் இணங்குகின்ற அந்த செலவின வகுதிகளில் வருமானக் கூற்றில் தொடர்கின்ற தொழிற்பாடுகளின் குறைபாட்டு நஷ்டங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. இவ்விடயத்தில், ஏதாவது முன்னைய மீள்-மதிப்பீட்டின் தொகை வரை ஒப்புரவில் குறைபாடு அங்கீகரிக்கப்படுகின்றது.

நல்லெண்ணம் புறநீங்கலான சொத்துக்களுக்கு, ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட குறைப்பாட்டு நஷ்டங்கள் தொடர்ந்துமே நிலவவில்லை அல்லது குறைவடைந்திருக்கக்கூடும் என்ற ஏதாவது எடுத்துக்காட்டு உள்ளதாக என்பதையிட்டு ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியில் மதிப்பீடொன்று செய்யப்படுகின்றது. அத்தகைய எடுத்துக்காட்டு நிலவினால், அறவிடக்கூடிய தொகையில் மதிப்பீடொன்றைக் கம்பனி செய்கின்றது. குறைபாட்டிலான இழப்பு அங்கீகரிக்கப்பட்டதிலிருந்து சொத்துக்கள் அறவிடல் தொகையை நிர்ணயிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட மதிப்பீடுகளில் மாற்றமொன்று இருந்தால் மட்டுமே ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட குறைபாட்டு இழப்பொன்று மறுதலையாக்கப்படுகின்றது. அதுதான் விடயம் என்றால், சொத்தின் காவும் தொகையானது அதன் அறவிடக்கூடிய தொகைக்கு அதிகரிக்கப்படுகின்றது.

முன்னைய வருடங்களில் சொத்துக்காக குறைபாட்டு இழப்பு அங்கீகரிக்கப்பட்டிருக்காவிட்டால், நிகர மதிப்பிறக்கம் கொண்டிருக்கக்கூடியதை நிர்ணயித்துள்ள காவும் தொகையை அந்த அதிகரித்துள்ள தொகை “மீற” முடியாது. மீள-மதிப்பிடப்பட்ட தொகையின் சொத்து காவப்பட்டாலன்றி வருமானக் கூற்றில் அத்தகைய மறுதலையாக்குதல் அங்கீகரிக்கப்படுகின்றது. இவ்விடயத்தில் மீள்-மதிப்பிலான அதிகரிப்பொன்றாக மறுதலையாக்குதல் கருதப்படுகின்றது.

### 2.2.4 நடந்து கொண்டிருக்கும் மொத்த வேலை

சொத்தின் முதலாவது பயன்பாட்டு நேரத்தில் சம்பந்தப்பட்ட சொத்துக் கணக்குகளுக்கு நடந்துகொண்டிருக்கும் மொத்த வேலை கைமாற்றப்படுகின்றது.

### 2.2.5 மூலதனங்கள்

**நீண்ட கால மூலதனங்கள்**

நடைமுறைசாரா முதலீடுகளாக நீண்ட கால முதலீடுகள் வகைப்படுத்தப்படுவதுடன், ஏதாவது குறைப்பாட்டு இழப்புக்கள் கழிக்கப்பட்டு ஆகுசெலவில் குறிப்பிடப்படுகின்றன. தரகுக்கூலி, கட்டணம், தீர்வைகள் மற்றும் வங்கிக் கட்டணங்கள் போன்ற கையகப்படுத்தல் கட்டணங்களை மூலதனத்தின் ஆகுசெலவு உள்ளடக்குகின்றது.

தனிப்பட்ட அடிப்படையின் மீது நிர்ணயிக்கப்பட்டவாறு முதலீடுகளின் பெறுமதியில், தற்காலிகமாக அன்றி வீழ்ச்சியொன்றிருப்பதாக பணிப்பாளர்கள் கருத்தினைக் கொண்டிருக்கும் போது, வருமானக் கூற்றில் குறைபாட்டுக்கான ஏற்பாடு செய்யப்படுகின்றது.

**குறுகிய கால மூலதனங்கள்**

நடைமுறையிலான மூலதனங்கள் ஆகுசெலவில் குறிப்பிடப்படுகின்றன.

### 2.2.6 பொருட்பட்டியல்கள்

வழக்கொழிந்த மற்றும் மெதுவாக நகரும் விடயங்களுக்கு உரிய கழிவினைச் செய்த பின்னர், குறைந்த ஆகுசெலவிலும், நிகர தேறக்கூடிய பெறுமதியிலும் பொருட்பட்டியல்கள் மதிப்பிடப்படுகின்றன. முடித்தலின் மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு கழிக்கப்பட்டதும், விற்பனையைச் செய்வதற்கு அவசியமான மதிப்பிடப்பட்டதுமான ஆகுசெலவில் சாதாரண வியாபார மார்க்கத்தில் பொருட்பட்டியல் விற்பனை செய்யக்கூடிய விலையே நிகர தேறக்கூடிய பெறுமதியாகும்.
